# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)

## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்

**11 மார்ச் 2016 / 02 ஜமாதியுல் ஆகிர் 1437**

## <u>அல்லாஹ்விடமிருந்து பெறப்படும் அருட்கொடைகளின் விஷயத்தில் நீதமாக நடந்து கொள்வது</u>

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே! புனிதமிக்க வெள்ளிக்கிழமை தினத்தில் அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பக்தியை அதிகரித்து, அதனை உச்சகட்டமாக ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போமாக! அவன் தடுத்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக!

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

திருக்குர்ஆனின் "இப்ராஹிம்" எனும் அத்தியாயத்தின் 34-வது வசனத்தில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகின்றான்:

وَءَاتَىٰكُم مِّن كُلِّ مَا سَأَلْتُمُوهُ ۚ وَإِن تَعُدُّوا۟ نِعْمَتَ ٱللَّهِ لَا
تُحْصُوهَآ ۗ إِنَّ ٱلْإِنسَـٰنَ لَظَلُومٌ كَفَّارٌ ﴿٣٤﴾

பொருள்: (இவையன்றி) நீங்கள் அவனிடம் கேட்ட யாவற்றிலிருந்தும் அவன் உங்களுக்குக் கொடுத்தான்; அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணிப்பீர்களாயின் அவற்றை நீங்கள் எண்ணி முடியாது! நிச்சயமாக மனிதன் மிக்க அநியாயக்காரனாகவும், மிக்க நன்றி கெட்டவனாகவும் இருக்கின்றான்.

ஜமாஅத்தார்களே!

தற்போது உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனத்தில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அருளிய அருட்கொடைகளுக்கு மாற்றமாக நடந்து கொள்பவர்கள் தான் உண்மையில் கொடூரமானவர்கள்; அநீதம் செய்பவர்கள் என அல்லாஹ் நமக்கு நினைவூட்டுகின்றான். கடந்த வாரப் பிரசங்கங்களில் நீதமாக நடப்பதன் அவசியத்தைப் பற்றி விவாதிக் கப்பட்டது. ஒரு பொருளை அதற்குரிய இடத்தில் வைப்பதும், அதற்குரிய உரிமைகளை வழங்குவதும் நீதத்தின் தேட்டமாகும்; நீதம் இல்லையெனில் பரவலாக அடக்குமுறையும் கொடூரமும் தான் காணப்படும் எனவும் விவாதிக்கப்பட்டது.

தமக்கு அருளப்பட்ட அருட்கொடைகள் விஷயத்தில் அநீதமாக நடந்து கொண்டதன் காரணமாக அல்லாஹ்வின் அருட்கொடைகளை எவர்கள் இழந்தார்களோ அவர்களின் வரலாற்றை பல தடவை மீண்டும் மீண்டும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகிறான். அத்தகையோர், தமக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகளைக் கொண்டு நற்காரியங்களைச் செய்யவும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடவும் தவறி விட்டார்கள். மாறாக, அவர்கள் அந்த அருட்கொடைகளை, தமது மனோ இச்சையின் தேட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்தினார்கள். உதாரணமாக, ஃபிர்அவ்னும் அவனது படையினரும் கடலில் மூழ்கடிக்கப்பட்டார்கள். காரணம், அல்லாஹ் அவனுக்கு வழங்கிய அதிகாரம் எனும் அருட்கொடைக்கு மாற்றமாக அவன் செயல்பட்டான். "காரூன்" அவனது செல்வத்துடன் பூகம்பத்தின் மூலம் அழிக்கப்பட்டான். காரணம், அவனுக்கு வழங்கப்பட்ட செல்வம் எனும் அருட்கொடைக்காக அல்லாஹ்வுக்கு அவன் நன்றி தெரிவிக்காமல் நிராகரிப்பு செய்தான். "ஹாமான்" என்பவன் அவனுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட அறிவாற்றல் எனும் வெகுமதியின் மதிப்பை உணராமல் நிராகரிப்பு செய்தான். அவனும் அழிக்கப்பட்டான்.

ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வினால் அருளப்பட்டுள்ள மிகப் பெரிய அருட்கொடைகளில் ஒன்று இயற்கை வளங்களாகும். குறிப்பாக தண்ணீர் மிகப் பெரும் அருட்கொடையாகும். இவ்விஷயத்தில் நம்மில் சிலர் கவனக் குறைவாக உள்ளார்கள். பூமியில் வாழும் ஒன்பது நபர்களில் ஒருவர் சுத்தமான குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார் என்பதை நாம் அறிவோமா? நமது நாட்டில் தண்ணீர் மிக எளிதாகக் கிடைப்பதாலும், ஒழுச் செய்வது எனும் வணக்க

வழிபாட்டுச் செயல் முதற்கொண்டு, நமது வாழ்வின் அனைத்து தேவைகளுக்கும் தண்ணீர் இங்கு மிகவும் எளிதாகக் கிடைப்பதாலும் நம்மில் பலர் தண்ணீர் எனும் மாபெரும் அருட்கொடையின் அருமையை உணராமலுள்ளார்கள். இங்கு, தண்ணீர் பங்கீட்டின் விஷயத்திலும் குடிப்பதற்கானத் தண்ணீரை நாம் அடையும் விஷயத்திலும் கஷ்டத்தை உணர்வது மிகவும் அரிதாக உள்ளது. தண்ணீரின் ஒவ்வொரு துளியும் நமது உயிர் மற்றும் வாழ்க்கையின் துளிகளாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அனைத்து படைப்புகளுக்கும் தண்ணீர் அடிப்படை வாழ்வாதாரமாகும். அதுவன்றி எந்த உயிரினமும் வாழ முடியாது. அல்லாஹ்வின் புறத்திலிருந்து வழங்கப்படும் தண்ணீர் எனும் அருட்கொடையைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறும் கருத்துக்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

وَجَعَلْنَا مِنَ الْمَاءِ كُلَّ شَيْءٍ حَيٍّ أَفَلَا يُؤْمِنُونَ ﴿٣٠﴾

பொருள்: உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதை இறை நிராகரிப்பாளர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லையா? (அத்தியாயம்: அல்-அன்பியா, வசனம்: 30)

படைப்பாளனாகிய அல்லாஹ், தண்ணீரை இப்பூமியில் வாழ்வின் ஆதாரமாக ஆக்கியுள்ளான். ஜமாஅத்தார்களே! மற்ற பல நாடுகளில் நடப்பது போன்று தண்ணீர் எனும் அருட்கொடை நம்மிடமிருந்து பிடுங்கப்பட்டு விட்டால் என்ன நடக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்! சிங்கப்பூரில், அண்மையில் நீண்ட நாட்கள் நிலவிய வறட்சியை நம்மில் பலர் நினைவில் கொண்டிருக்கலாம். அப்போது மரங்களும் செடிகளும்

உலர்ந்து விட்டதை நாம் கண்டிருக்கலாம். அது நமக்கு கவலையை ஏற்படுத்தியது. காரணம், வெப்பமான சீதோஷ்ண நிலை நமது தண்ணீர் விநியோகத்தைப் பாதிக்கும். கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாகுவதற்கும், நமது சுற்றுப்புறத்துக்கும் நமக்கும் ஆபத்துகள் ஏற்படுவதற்கும் காரணமாகும். எனவே, நாம் எப்போதும் தண்ணீர் எனும் ”நிஃமத்” (அருட்கொடை) விஷயத்தில் நீதமாக நடந்து கொள்வது அவசியமாகும்.

ஜமாஅத்தார்களே!

தண்ணீர் எனும் அருட்கொடையின் மதிப்பை உணர வேண்டும் என இஸ்லாம் கூறுவதால், தண்ணீரை அறிவுப்பூர்வமாகவும் விவேகத்துடனும் பயன்படுத்துவதன் மூலம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் ”சுன்னத்” எனும் வழிமுறையை நாம் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். முதன்முதலாக, நம்மிலும், நமது பிள்ளைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமும் தண்ணீர் விஷயத்தில் நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதன் மூலம் அதற்கான முயற்சியை ஆரம்பிக்க வேண்டும். ஒரு துளித் தண்ணீரைக் கூட வீணாக்காமல் தண்ணீர் எனும் அருட்கொடையின் மதிப்பை நமது உள்ளங்களில் ஆழமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ஒரு ”முத்து” (அதாவது சுமார் அரை லிட்டர்) தண்ணீரைக் கொண்டு மட்டும் எவ்வாறு ஒழுச் செய்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதுபோன்ற கடமையுணர்ச்சி நம்மிடமும் காணப்பட வேண்டும். காரணம், அதுதான் நமது உறுதியான ”ஈமான்” எனும் இறை நம்பிக்கையிலிருந்து நாம் பெற வேண்டிய முக்கிய அம்சமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-இஸ்றா” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 27-வது வசனத்தில் கூறும் கருத்துக்களை நினைவில் கொள்ளுங்கள்:

إِنَّ ٱلۡمُبَذِّرِينَ كَانُوٓاْ إِخۡوَٰنَ ٱلشَّيَٰطِينِۖ وَكَانَ ٱلشَّيۡطَٰنُ لِرَبِّهِۦ كَفُورٗا ٢٧

பொருள்: நிச்சயமாக வீண் விரயஞ் செய்பவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாவார்கள்; ஷைத்தானோ தன்னுடைய இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான்.

எனவே, தண்ணீரைச் சேமிக்க முயற்சிப்போமாக! ஒழுச் செய்வதில் மட்டுமல்ல, நமது வாழ்க்கையில் அனைத்து அம்சங்களிலும் அவ்வாறு செய்ய முயற்சிப்போமாக! தண்ணீரைச் சேமிப்பதற்காக நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் அல்லாஹ்வின் பார்வையில் மரியாதைக்குரியதாகும் என்பதையும், உலகின் வளத்துக்கு பங்களிப்பாக அமையும் என்பதையும் அறிவோமாக! நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும் நமது நாட்டுக்கும், வளத்தையும் பாதுகாப்பையும் வழங்க வேண்டுமெனவும், அனைத்து வித பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பை வழங்கவேண்டுமெனவும் எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் வேண்டிக் கொள்கிறோம். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.